மதுரை மாநகராட்சி நிர்வாகம் சார்பாக சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் வைகை ஆற்றங்கரையினை மேம்படுத்தும் பணிகள், அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் ஓபுளாபடித் துறையில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம், அறிஞர் அண்ணா மாளிகை 50 ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டு நுழைவுவாயில் ஆகிய முடிவுற்ற திட்டப் பணிகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக அலங்காநல்லூர், வாடிப்பட்டி, கள்ளிக்குடி, திருமங்கலம், செல்லம்பட்டி, உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம், சேடப்பட்டி. கல்லுப்பட்டி, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஒன்றியங்களைச் சார்ந்த ஊரக குடியிருப்புகளுக்கான 3 கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் உசிலம்பட்டி நகராட்சிக்கான பிரத்யேக குடிநீர் திட்டம் உள்ளிட்ட திட்டப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த்,மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சு.வெங்கடேசன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி மற்றும் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் இன்று 28ம் தேதி முதல் 31ம் தேதி முடிய நான்கு நாட்கள்

இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டங்கள்!

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் அறிவிப்பு!

சிவகங்கை, மே 28 - சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சி கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு சாதனைகளை செய்து வருகிறது. ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி என்று மக்கள் பாராட்டும் வகையில் நடைபெறும் கழக அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்து கூறும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

அவரது உத்தரவின் பேரிலும் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சரு மான கே ஆர். பெரிய கருப்பன், மாநில இலக்கிய அணிப் புரவ லரும், முன்னாள் அமைச்சருமான மு. தென்னவன் ஆலோசனையின்பேரில் இன்றுஞாயிறு 28ம் தேதி முதல் 31ம் தேதி முடிய மாவட்டம் முழுவதும் ஒன்றிய , நகர, பேரூர், கழகங்களில் 35க்கும் மேற்பட்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற உள்ளது. எனவே அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பான முறையில் தெருமுனை பிரச்சார கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் இடங்கள்.

28.5.2023 - ஞாயிறு காளையார் கோவில் கிழக்கு, வடக்கு ஒன்றியம். சிறப்புரை தலைமைக் கழக பேச்சாளர். வி .பி. ராஜன் முன்னாள் எம்.எல்.ஏ. மானாமதுரை நகரம். புதுக்கோட்டை விஜயா. தலைமை கழக பேச்சாளர். தேவகோட்டை தெற்கு, வடக்கு, தலைமைக் கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன்.

29.5.2023 - திங்கட் கிழமை சிவகங்கை நகர் வி. பி.ராஜன் முன்னாள் எம். எல்.ஏ. தேவகோட்டை, காரைக்குடி நகரம், புதுக் கோட்டை விஜயா தலைமைக் கழக பேச்சாளர். சிவ கங்கை தெற்கு,வடக்கு, ஒன்றியம். வழக்கறிஞர் அ.கணேசன் தலைமைக் கழக பேச்சாளர்.

30.5.2023 - செவ்வாய்க் கிழமை. இளையான்குடி வடக்கு, இளையான்குடி தெற்கு, வி.பி. ராஜன். முன்னாள் எம்.எல்.ஏ. இளையான்குடி கிழக்கு இளையான்குடி மேற்கு, திருமதி ஆதி.கண்ணாத்தாள் திருமதி தெய்வானை இளமாறன். மானாமதுரை கிழக்கு, மேற்கு, த.சேங்கை மாறன் . மாவட்ட துணை செயலாளர். சிங்கம்புணரி வடக்கு கே.எஸ்.எம்.மணிமுத்து தலைமைக் கழக பேச்சாளர். சிங்கம்புணரி தெற்கு அய்யாச்சாமி தலைமைக் கழக பேச்சாளர். கண்ணங்குடி ஒன்றியம். கவிஞர். சிவ.முத்து வளவன் தலைமைக் கழக பேச்சாளர். கல்லல்கிழக்கு,மேற்கு திருமதி பவானி கணேசன் திருமதி ஹேமலதா செந்தில்.

31.5.2023 - புதன்கிழமை திருப்புவனம் பேரூர், திருப்புவனம் கிழக்கு, மேற்கு, வழக்கறிஞர் அ.கணேசன் தலைமைகழக பேச்சாளர் திருப்பத்தூர் பேரூர், வடக்கு ஒன்றியம் கருர் முரளி தலைமைக் கழக பேச்சாளர் சாக்கோட்டை கிழக்கு மானாமதுரை துரை ராஜாமணி, புதுவயல் பேரூர் மானாமதுரை க. பொன்னுச் சாமி, காளையார் கோவில் தெற்கு - பசும்பொன் ரவிச் சந்திரன்,

இத்தகவலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் நாளை (29.05. 2023 - திங்கள்கிழமை) மாலை 3 மணி அளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர்.கொ. நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

அது சமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச.நிர்வாகிகள்அனைவரும்கலந்துகொள்ளவேண்டும்எனகேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1.முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது, ஜுன் 3 தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு கிளை கழகங்கள் தோறும் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், உறுப்பினர் சேர்க்கையை முழுமைப்படுத்துதல் , கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் சி.வெ.கணேசன்
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.அருணாச்சலம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலை வகித்து முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா, கழக உறுப்பினர் சேர்ப்பு நிறைவு செய்தல், கழக ஆக்கப் பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். உடன் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, முன்னாள் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர், வர்த்தக அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,மாவட்ட துணைச் செயலாளர் ஜெயக்குமார் ரூபன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, ஒன்றியச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தியா 'இந்துத்துவா' நாடா?

புதிய நாடாளுமன்றக் கட்டிட திறப்பு விழாவைப் புறக்கணிப்பதாக தி.மு.க, காங்கிரசு கட்சிகள் உள்ளிட்ட 19 கட்சிகள் அறிவித்துள்ளன. புதுடில்லியில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை இன்று இந்தியத் தலைமை அமைச்சர் மோடி திறப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதே அதற்குக் காரணம். பல்வேறு அரசியல் சர்ச்சைகள் கிளம்பி உள்ள இந்த நாள் தான் இந்துத்துவ கொள்கையான வர்ணாசிரம தர்மத்தையும், சனாதனத் தர்மத்தையும் தூக்கிப்பிடித்து நாட்டை துண்டாடக் காரணமானவர்களில் ஒருவரான சாவர்க்கர் பிறந்த நாளாகும்.

சாவர்க்கர் தன் வாழ்நாள் முழுவதுமே, வெறுப்பு அரசியல் நடத்தி வந்தவர். ஆங்கிலேயர் காலத்தில் சிறையில் இருந்த போது பலமுறை மன்னிப்புக்கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு விடுதலையான ஆர். எஸ். எஸ். வாதி தான் அவர். "இந்துத்துவா" கொள்கையைத் தூக்கிப் பிடித்த சாவர்க்கர் தான் தேசப்பிதா மகாத்மா காந்தியைக் சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சேயின் தலையாயக் குருநாதர்.

சாவர்க்கர் இந்து மதத்தை விட இந்துத்துவா விரிவான பொருளுடையது என்றும், இந்து இனமே இந்தியத் தேசத்தின் கருப்பொருள் என்றும் அவர் கருதியதுடன் இந்திய நாட்டில் மக்களைப் பிளவுபடுத்தும் மத வெறி அரசியல் நடத்தி வந்தவர். இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்களுடையே பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்டு தீண்டாமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தவர். அப்படிப்பட்ட இந்து வெறியர் பிறந்த நாளான இன்றுமே 28 அன்று புதிய நாடாளுமன்றத் கட்டிடத்தைத் திறக்கத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் மோடிஅரசுக்கு என்ன? என்பது அனைவருக்கும் தெரியவரும்.

நாட்டின் விடுதலைக்காகப் போராடி மடிந்த மகாத்மா காந்தி நாளை ஏன் தேர்ந்தெடுக்கவில்லை? அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்த டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் மோடி அரசு தேர்ந்தெடுக்க ஏன் முன் வரவில்லை ?மோடி அரசு செய்து வரும் மத வெறிச் செயலால் ஒட்டுமொத்த இந்திய மக்களை அவமதிக்கும் செயல் அல்லவா?

இக்கட்டிடம் கட்ட முதலில் மதிப்பிடப்பட்ட தொகை ரூபாய் 977 கோடி. அதன் பின்னர் பல்வேறு காரணங்கள் காட்டி அதன் செலவுத் தொகை அதிகரித்தது என ரூபாய் 1,250 கோடி ஆக கூடுதல் ஆக்கப்பட்டது. மேலும், முழு பணிகளும் முடிவடையாத நிலையில், இன்னும் சுமார் ரூபாய் 20,000 கோடி முதல், ரூபாய் 25,000 கோடி வரையிலான மதிப்பில் நிலுவைப் பணிகள் உள்ளன என வும்ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு கூறியுள்ளது.

பா.ஜ.க என்பது ஆர். எஸ். எஸ். அமைப்பிலிருந்து உருவாகிய ஒரு வகுப்புவாத கட்சி என்பதால் தானே, சாவர்க்கர் பிறந்தநாளை தேர்ந்தெடுத்துள்ளது மோடி அரசு என்பதை, நாம் உணர வேண்டும். ஏற்கெனவே பாரதிய ஜனதா கட்சி கடந்த காலத்தில் நாடாளுமன்றக் கட்டிடத்தில் இதே சாவர்க்கருடைய உருவப்படத்தைத் திறந்து உள்ளது என்பதை தற்போது நாம் நினைவு கூர வேண்டும்.

96 ஆண்டுகள் பழமையான நாடாளுமன்றத்திற்குப் பதிலாக புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்ட கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று, அடிக்கல் நாட்டினார் பிரதமர்மோடி. நாலு மாடிகள் கொண்ட புதிய கட்டிடத்திற்கு நிலப்பரப்பு சுமார் 64,500 சதுர மீட்டர் கொண்டதாகும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருகே மேஜை பொருட்கள் வைக்க வசதிகள் கூட்டுக் கூட்டம் நடத்த அரங்குகள், உணவுக் கூடங்கள், வாகன நிறுத்தங்கள் என சொகுசு நிலையில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் செய்திகள் வருகின்றன. மக்களவையில் 543 இருக்கைகள் என்பதில் 888புதிய இருக்கைகளும், மாநிலங்கள் அவையில் 250 இருக்கைகள் என்பதற்குப் பதிலாக 300 புதிய இருக்கைகளும், ஆக 1,224 உறுப்பினர்கள் அமரக்கூடிய புதிய இருக்கைகள் கொண்ட கூடுதலாகவே மொத்தம் 1,280 இருக்கைகள் புதிய கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது இயங்கி வரும் பழைய நாடாளுமன்றக் கட்டடம் 1927 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆங்கிலேயர் காலத்தில் இங்கிலாந்தைச்சேர்ந்த எட்வின் லுட்யன்ஸ், ஹெர்பர்ட் பேக்கர் ஆகியோரால் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டது என்பது வரலாறு.

பழைய கட்டடம் புதுப்பிப்பதும், சீரமைப்பதுமான பணிகளை யாரும் மறுப்பதற்கு இல்லை. ஆனால், பழைய கட்டிடம் வலுவாக இருக்கும் நிலையில், இப்போது புதுக் கட்டடம் கட்டுவது என்பது தேவையா ? என அரசியல் பொருளாதார வல்லுநர்கள் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

நூறு ஆண்டுகள் நெருங்கும் நிலையில் உள்ள இப்பழைய கட்டடம், தற்போது வலுவிழந்து வருவதாகவும், உறுப்பினர்கள் அமர இடப்பற்றாக்குறை ஏற்பட்டதாகவும், அதனால்தான் புதிய கட்டிடம் கட்ட வேண்டிய நிர்வாகச் சூழ்நிலை ஏற்பட்டு,அதற்கான இடைத்தேர்வு செய்யப்பட்டதாகவும் பாரதிய ஜனதா கட்சி அரசு கூறுகிறது.

மோடி ஆட்சியின் தவறான அரசியல் பொருளாதாரக் கொள்கையால்,நாட்டில் சிறு குறு, நடுத்தரத் தொழில்கள் நசிந்து முடக்கம், பொருளாதார வீழ்ச்சி, பண மதிப்பிழப்பு, வேலையின்மை, கடும் விலைவாசி உயர்வு, ஏழ்மையில் வாழ்வாதாரம் தள்ளாட்டம், வறுமைத் தாண்டவம் என்பன போன்ற சூழ்நிலையில் நாடு சிக்கிச் சீரழியும் போது, புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்ட என்ன அவசியம் ஏற்பட்டுள்ளது எனவும் அரசியல் கட்சிகள் கடும் விமர்சனம் செய்து, கண்டனம் தெரிவித்து வருகின்றன.

செலவழிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோடியில், பல கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் மக்களுக்காக உருவாக்கி இருக்கலாம் அல்லவா?

இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக உள்ள முதல் குடிமகரான திரவுபதி முர்முக்குத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க எந்தவித அழைப்பும் விடுக்கவில்லை. அதைப்போல,கடந்த காலத்தில் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவின் போது, அன்றைய நாளில் குடியரசுத் தலைவராக இருந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த இராம்நாத் கோவிந்து அவர்களுக்கும் இதுபோன்று அழைப்பில்லாமல் புறக்கணிக்கப்பட்ட வரலாறும் உண்டு.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், புதிய பாராளுமன்றக் கட்டிடத்தை இன்று தலைமை அமைச்சர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார் என்பதற்கான அழைப்புகள் ஒன்றிய அரசின் நிர்வாக இயந்திரங்களால் வழங்கப்பட்டுள்ளன. திறக்கப்படவுள்ள நாடாளுமன்றக் கட்டிடத்தை மோடியே அடிக்கல் நாட்டி விட்டு அவரே திறப்பதா என்ற வினா அரசியல் கட்சி எழுப்பி வருவதோடு இந்திய மக்களும் இந்நிகழ்வு குறித்து, உற்று நோக்கி வருகிறார்கள்.

அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்பு 79 கூறுகிறபடி, இந்திய ஒன்றியத்திற்கு ஒரு நாடாளுமன்றம் இருக்கும். அது ஒரு குடியரசுத் தலைவரையும், மாநிலங்கள் அவை மற்றும் மக்களவை ஆகிய இரு அவைகளையும் கொண்டிருக்கும் என்று பறைசாற்றுகிறது. (There shall be Parliament for the union which shall consist of. the President and two Houses to be known respectively as the Council of States and House of the people)

புதிய கட்டிடத்தைத் திறப்பதற்குக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முக்கு வாய்ப்பு வழங்கி உயர் பதவியில் இருக்கும் அவரைப் பெருமைப்படுத்தி இருக்கலாம் மோடி அரசு. பழங்குடி இனத்தைச் சார்ந்த பெண்ணான அவரைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் நிறுத்தி உள்ளோம் எனப் பாரதிய ஜனதா கட்சி, அன்று பித்தலாட்ட அரசியல் நடத்தியது எல்லாம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இன்று பாராளுமன்ற கட்டிடத்தை பிரதமர் மோடி திறப்பதாக உள்ளது ஏன்? இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி பாராளுமன்ற நிர்வாகம் என்பது குடியரசு தலைவர் கீழ்தான் நடைபெறுகிறது.அனைத்துக் கட்சி. உறுப்பினர்கள் எனும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படுகிறது. பாராளுமன்றம் கூட்டப்படும் போது இரு அவைகளும் குடியரசு தலைவர் உரையின் போது ஒன்றாக கூட்டப்படும் வரலாறு உண்டு. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் யாவும் குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆகவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பு சிதையாமல் இருக்கவும்,மதிப்பு தரப்படவும் பாராளுமன்ற கட்டிடம் திறக்கப்பட வேண்டும் என்று ஒரு மரியாதைக்காகச் சொல்லப்படுகிறது. ஆனால் பாராளுமன்றம் ஏற்கனவே கட்டப்படத் தொடங்கி வைக்கும் போது... இராம்நாத் கோவிந்த் குடியரசு தலைவராக இருந்த அவரை அழைக்கவும் இல்லை; காரணம், அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். தற்போது திறப்பதற்கு இப்பொழுது உள்ள மலைச் சாதி வகுப்பைச் சேர்ந்த திரவுபதி முர்மு அவர்களை வைத்துத் திறப்பதற்கும் மோடி அரசு முன்வரவில்லை. காரணம்; அவரும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் ஜாதியை சேர்ந்தவர் என்பதாலும், ஆர்.எஸ்.எஸ். உடைய கொள்கையை நிலைநாட்டுவதாலும், சாவர்க்கர் போன்ற சாதி வெறிபிடித்த இந்துத்துவக் கொள்கை தூக்கிப் பிடிப்பதாலும் பாரதிய ஜனதா கட்சி இது போன்ற எதிர்க்கட்சியினுடைய ஆலேசனை அறிவுரைகளைக் கேட்காமல், குடியரசுத் தலைவருக்குப் பாராளுமன்றக் கட்டிடத்தை திறப்பதற்கு வாய்ப்பு வழங்காத ஒரு மிகப்பெரிய தீண்டாமை எனும் ஜனநாயக படுகொலை நடந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் அனைத்து எதிர்க்கட்சிகள் கண்டித்து அந்தத் திறப்பு விழாவில் பங்கேற்க மறுக்கிறது.

குடியரசுத் தலைவர் இந்திய ஒன்றியத்தின் தலைவராக இருப்பதால் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளன நாடாளுமன்றத்தின் சட்டங்கள் இயற்றுவது உட்பட இவருடைய செயலாட்சி விரிவடைகிறது. அரசாங்கம் ஆட்சி அதிகாரங்களுக்கு உட்பட்டவை என்பது உறுதியாகும். இவர் நாட்டின் தலைவர் என்பதால், மைய அரசின் சட்டங்கள் நடைமுறைப் படுத்தக் கோரி மாநிலங்களுக்கான ஆணையிடும் அதிகாரம் என்ற ஆற்றல் இவருக்கு உண்டு. ஆகவே, நாடாளுமன்றத்தினு டைய பெரு

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக் குழுத் தலைவர்

மைகளைப் பறைசாற்ற வேண்டுமென்றால், குடியரசுத் தலைவர்கள் மரியாதை. மாண்பை நாம் போற்றிட முன்வர வேண்டும். அந்த வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் பெருமைகள் பேசப்படக் கட்சிக்கு அப்பாற்பட்ட முறையில் குடியரசுத் தலைவர் தான் பாராளுமன்ற கட்டிடத்தைத் திறக்க வேண்டும் என்ற அரிய நோக்கத்தை நிறைவேற்ற மோடி அரசு தவறுகிறது.

நமது இந்திய நாடு நாடாளுமன்ற குடியரசு நாடாகும். குடியரசுத் தலைவர் என்பவர் பேரளவில் ஆட்சித் தலைவராக இருந்தாலும் அமைச்சரவையின் கலந்தாய்வு முடிவுப் படியே செயல்படுகிறார்.

குடியரசுத் தலைவர் லோக்சபா ராஜ்யசபா இரு அவைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும், மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலும் இடம் பெற்ற வராவார்

உத்தரப்பிரதேசத்தில் சம்பூர்னானந்தச் சிலையைத் துணைப் பிரதமராக இருந்த ஜெகஜீவன் ராம் திறந்து வைத்தார். அவர் சிலையைத் திறந்து வெளியேறியப் பின் கங்கை நதி நீரை விட்டுக் கழுவினார்கள். சட்டம் படித்த ஜெகஜீவன்ராம் இராணுவ அமைச்சராகப் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் இருந்தார். ஆனால் அவர் திறந்து வைத்த சிலையை மேல் சாதிக் காரர்கள் கங்கை நீரை விட்டுத் தீட்டுப்பட்டு விட்டது. என்று கழுவிய வரலாறு உண்டு.

பீகார் மாநிலத்தில், முதல்வராக இருந்த மாஞ்சி அவர்கள், ஒரு காளி கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தி விட்டு அவர் சென்ற பின்னர், அந்தக் காளிக் கோயிலில் தாழ்த்தப்பட்ட குடிமகன் மாஞ்சி வந்து சென்று விட்டாரே; அதனால் புனிதம் கெட்டு விட்டது. தீட்டுப்பட்டுவிட்டது என்று கருதிக் கங்கை நீரை விட்டுக் கழுவிச் சுத்தம் செய்த வரலாறும் உண்டு.

குஜராத்தில் உயர் நீதிமன்றத்தில் ஒரு உயர் ஜாதி நீதிபதி அமர வேண்டிய சூழ்நிலை வந்தது. அந்த நீதிபதி பொறுப்பேற்பதற்கு முதல் நாள் இரவு, உயர் நீதிமன்ற நீதிபதியின் இருக்கை முழுவதும் நீர் ஊற்றிக் கழுவப்பட்டது. காரணம் கேட்டபோது உயர் ஜாதி நீதிபதி வருவதற்கு முன்னாள் வரை தாழ்த்தப்பட்ட நீதிபரிபாலன நிர்வாக முறையில் நீதிபதியாக ஒருவர் இருந்து பணிபுரிந்தார் என்று கூறி அந்த நீதிபதி அமர்ந்த இடம், அறை தீட்டுப்பட்டு விட்டன எனவும், அதனால் நீரூற்றிக் கழுவப்பட்டது என்றும் சொல்லப்பட்ட கொடூரம் நடந்தது.

அரசியல் சட்டத்தை இயற்றிய டாக்டர் அம்பேத்கர் ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபுவுடன் ஓரிசாவில் உள்ள பூரி ஜெகநாதர் கோயிலுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள குருக்கள் மவுண்ட் பேட்டனை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றார்கள். டாக்டர் அம்பேத்கரை வெளியே நிறுத்தி விட்டார்கள். ஆங்கிலேயரான மவுண்ட்பேட்டன் கிருஸ்துவர். அவர் உள்ளே அழைத்துச் செல்லப்படுகிறார். ஆனால் இந்து மதத்தைச் சேர்ந்த சூத்திரச் சாதி சேர்ந்தவர் என்பதால், டாக்டர் அம்பேத்கரைகோயில் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

தற்போது முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த ராமநாத் கோவிந்துதன் குடும்பத்துடன் ஓரிசா பூரி ஜெகநாதர் கோயிலுக்கும், அதைப்போல, இராஜஸ்தான் பிரம்மன் கோயிலுக்கும் வழிபாடு நடத்த சென்றபோது., உள்ளே அனுமதிக்கப்படவில்லை . அவர் தாழ்த்தப்பட்ட ஜாதி என்பதால் தீண்டாமை எனும் இந்துத்துவாக் கொள்கை தாண்டவம் ஆடுகிறது.

தெலுங்கானா ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் இந்து சாமியாரான சங்கராச்சாரி எனும் ஒருவரை சந்திக்கிறார். புடவை மற்றும் பொருட்களை மேல் ஜாதி பிராமணர்களுக்குக் கையில் தொட்டுக் கொடுத்து வழங்குகிறார் .அதே நேரத்தில்அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ஒரு ஆளுநராகச் செயல்படும் தமிழிசை சூத்திர சாதி என்பதால், வஸ்திரம் துணி போன்ற பூசைப் பொருட்களை மேலே இருந்து தூக்கிப் போடுகிறார் . இது போன்ற தீண்டாமைக் கொடுமை இந்துத்துவா மதவெறி ஒடுக்கப்பட்ட ஜாதிகளுக்கு எதிராக நடக்கிறதா... இல்லையா?

அன்று ஆசியாவின் இரண்டாவது உயரமான இந்தியாவின் பக்ராநங்கல் அணையைக் கட்டி முடித்தவுடன், அதில் வேலை பார்த்த பழங்குடியினப் பெண் ஒருவரை அழைத்து பிரதமராக இருந்த நேரு அவர்கள், அணைக்கட்டைத் தொடங்கி வைக்க ஏற்பாடு செய்துசமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தார். ஆனால், இன்று சனாதன பி.ஜே.பி. ஆட்சியில் புதிய நாடாளுமன்றத்தினைத் திறப்பதற்கு பழங்குடி இனத்தைச் சேர்ந்த இந்தியக் குடியரசுத் தலைவரான திரவுபதி முர்மு அவர்களைஅந்த விழாவிற்கு அழைப்பும் கொடுக்காமல், அவரை அழைத்து திறந்து வைக்க மதிப்பும் மரியாதையும் தராமல், ஒதுக்கி வைத்த இந்துத்துவா மதவெறித் தீண்டாமைக் கொள்கையைப் பா.ஜ.க மேற்கொள்வது ஆர்.எஸ்.எஸ். இன் கை பாவையான பா.ஜ.க பற்றி என்னவென்று சொல்வது?

பாரதிய ஜனதா கட்சி மத வெறி அரசு நடத்துகிறது என்பதற்கு ஓர் உதாரணம் இந்தியா விடுதலை பெற்ற போது, ஆட்சி பரிமாற்றம் ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி தருமபுரம் ஆதீனம் செங்கோல் கொடுத்ததாகவும், தமிழகத்தில் இருந்து சென்ற அந்தச் செங்கோல் மௌண்ட் பேட்டென் பிரபுவிடம் வழங்கி நேருவிடம் கொடுத்ததாகவும், அதை நாடாளுமன்றத்தில் வைத்து பெருமை கொண்டாடப்பட்டதாகத் திரிக்கப்பட்ட உண்மைக்குப் புறம்பான கதைகளைப் பார்ப்பன மதவாதக் கூட்டம் செய்து வருகிறது. இட்டுக்கட்டப்படும் கதைகள் அளந்து விடப்படுகின்றன.மதசார்பற்ற இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு மதத்தின் அடையாளமாகச் செங்கோலை ஏற்றுக் கொள்ள முடியுமா? என்பதை அரசியல் அமைப்பு சட்டத்தை போற்றும் பெருமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட அவல நிலை, தீண்டாமைக் கொடுமை மோடி ஆட்சியில் தொடர்கின்றன என்பது நாம் ஏற்க முடியுமா?

இதே போன்ற அவல நிலையில் தீண்டாமைக் கொடுமைகள் மோடி ஆட்சியில் நாடெங்கும் தொடர்கின்றன. இதைப் பறை சாற்றுகிற விதமாகத் தான், அதன் உச்சகட்டமாகத் தற்போது புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறக்க இந்தியக் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களைப் போற்றுவிதமாகப் பெருமைப் படுத்தாமல் அழைப்புதல் தந்து அனுமதியும் வழங்காமல், அழைப்பும் விடுக்காமல், ஆர்.எஸ்.எஸ் கட்சியின் சித்தாந்த வேலைகளை விநாயக் தாமோதர் சாவர்கள் கேசவ் பாலிராம். எம். எஸ். கோல் வால்கர், வழியில் மோடி கொடுங்கோல் எனும் பாசிச நாசிச ஆட்சி நடத்தி வருகிறார்.

ஆகவே தான், குடியரசுத் தலைவர் இல்லாமல் பாராளுமன்ற இயங்க முடியாது. ஆனால், அவர் இல்லாமலேயே புதிய பாராளுமன்றக கட்டடத்தைத் திறந்து வைக்க பிரதமர் முடிவு செய்து இருக்கிறார். இந்தக் கண்ணியமற்ற செயலைக் குடியரசுத் தலைவர் உயர் பதவியை அவமதிக்கிறது மோடி அரசு. அரசியலமைப்பு சட்டத்தின் உணர்வை மீறுகிறது என்று 19 எதிர்க்கட்சிகள் கூட்டு அறிக்கை விடுத்துள்ளன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புதிய நாடாளு